பக்கங்கள் 17+ 03

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 28 புதன்கிழமை 12.09.2025 | அதிர்வு 44

# குளவி கொட்டி பெண் மரணம்!

## மஸ்கெலியாவில் சோகம்



குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சூடுபிடிக்கும் அரசியல் களம்

## ரணிலையும் சந்தித்து பேசிய சீனத் தூதுவர்

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் உள்ள ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் இன்று இந்தச் சந்திப்பு நடைபெற 02

# உள்ளக, கலப்பு பொறிமுறையை முற்றாக நிராகரிக்க வேண்டும்!

## ஐ.நா. மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளிடம் 69 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை

இலங்கையில் நடந்த இனப் படுகொலை, மனித உரிமைகள் மீறல் என்பவற்றுக்கு நீதி – தீர்வு காண்பதற்கு உள்ளக மற்றும் கலப்புப் பொறி முறையை முற்றாக நிராகரிக்க வேண் டும் என்று 69 புலம்பெயர் தமிழர் அமைப்புகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளைக் கோரியுள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டவை வருமாறு:–

"பொறுப்புக்கூறலுக்கான ஆக்கபூர்வமான செயல்முறையை 02



## எல்ல பஸ் விபத்தில்

# படுகாயமடைந்த தங்காலை நகர சபையின் பெண் ஊழியர் சிகிச்சை பலனின்றி மரணம்!

எல்ல – வெல்லவாய பிரதான வீதியில் இம்மாதம் 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தங்காலை நகர சபையின் பெண் ஊழியர் இன்று வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தங்காலை நகர சபையில் கடமையாற் றிய 41 வயதுடைய பெண் ஊழியரே உயிரிழந்துள்ளார்.

எல்ல – வெல்லவாய பிரதான வீதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேருக்கும் அதிகமானோர் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலை, பண்டாரவளை மற்றும் தியத்தலாவை ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் தங்காலை நகர சபையில் கடமையாற்றிய 12 ஊழியர்களும் அடங்குகின்றனர்.

இந்நிலையில், விபத்தில் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தங்காலை நகர சபையின் பெண் ஊழியர் ஒருவர்



சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார். அதன்படி, எல்ல – வெல்லவாய பிர தான வீதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

# நீங்கள் செய்த ஊழல்களை அம்பலப்படுத்தினால் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வீர்களா?

## சந்திரசேகருக்கு அர்ச்சுனா சவால்



“மீன்பிடித்துறை அமைச்சராக இ. சந்திரசேகர் வந்தபின் கரைவலை மற்றும் சுருக்குவலை போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் எடுத்த நடவடிக்கை என்ன? நீங்கள் செய்த ஊழல்களை நான் வெளிப்படுத்தினால் அமைச்சுப் பதவியைத் துறப்பீர்களா?” – என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “கடற்றொழில் அமைச்சின் கீழ் பல ஊழல் குற்றச்சாட்டுகள் பொதுமக்களால் முன்வைக்கப்படுகின்ற போதும் அமைச்சர் சந்திரசேகர் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதது ஏன்?

நீரியல் வளங்கள் துறை அமைச்சராக சந்திரசேகர் பொறுப்பேற்ற பின் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் குறித்து கரிசனை கொள்ளவில்லை என்பது மக்களது முறைப்பாடாகும்.

இதுவரை குறித்த அமைச்சின் கீழ் பதியப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதை தெளிவுபடுத்த முடியுமா?, கடல் அட்டை பண்ணை விவகாரத்திலும் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளன என்று மக்கள் முறையிடுகின்றனர். இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் தங்களின் பினாமிகளின் பெயரில் கையூட்டல் இடம்பெறுகின்றது. இதற்கான ஆதாரங்களை சபையில் சமர்ப்பித்தால் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா?

குறிப்பாக, அமைச்சர் சந்திரசேகர் அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் வடக்கு மாகாண கடற்றொழில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் குறித்த விவரங்களை வெளிப்படுத்த முடியுமா?

அமைச்சர் சந்திரசேகர் மீது ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் பதவி விலகத் தயாரா?” – என்று அர்ச்சுனா எம்.பி. கேட்டார்.

இந்நிலையில் அர்ச்சுனா எம்.பியால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வேண்டும் என்று அமைச்சர் சந்திரசேகர் நாடாளுமன்றில் பதில் அளித்தார்.

### உள்ளக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கத்திடம் வலியுத்துவதன் மூலம் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளக பொறிமுறைக்கான இடைவெளியை வழங்குவதானது, அத்தகைய உள்ளகப் பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியின் பின்னணியில் அச்சுறுத்தலானதொரு நிலையையே தோற்றுவிக்கும்.

சுயாதீன சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் இவ்வாறான நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபைமீதான நம்பிக்கையில் சரிவு ஏற்படவும் – தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதற்குமே வழிகோலும்.

மேலும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான உள்ளக மற்றும் கலப்பு பொறிமுறைகளை முற்றாக நிராகரிக்கிறோம். இனவழிப்புப் பிரகடனத்தின்கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.” – என்றும் அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

### சூடுபிடிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளது.

சீனத் தூதுவரின் கோரிக்கைக்கு அமைய இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலுமான அரசியல் நிலைமைகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு – விஜேராம மாவத்தையில் உள்ள அரச இல்லத்தில் இருந்து நேற்று வெளியேறுவதற்கு முன்னர், அவருடன் சீனத் தூதுவருடன் இது போன்ற ஒரு கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.

மேலும், மற்றொரு உயர்மட்ட முன்னாள் அரசியல்வாதியுடனும் சீனத் தூதுவர் எதிர்காலத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குளவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலியா, புரவுன்ஸீக் தோட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு நாட்களுக்கு முன்னர் விறகு சேகரிக்கச் சென்ற 70 வயது மதிக்கத்தக்க பெண்ணே குளவிக் கொட்டுக்கு இலக்கானார்.

அவர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொற்றா நோய்ச் சிக்கல்

தமிழ்நாட்டில் பெரும் தொந்தி வைத்திருப்பவர்கள் எல்லோரும் தமிழகக் காவல் துறையில்தான் இருக்கிறார்கள் என்பது போன்ற ஒரு நகைச்சுவைப் பாணிக் கிண்டல்தனம் தமிழக சினிமாக்களில், பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் காட்டப்படுவது சர்வ சாதாரணம்.

ஆனால், இலங்கையில் அது போன்ற ஒரு புள்ளிவிவரத்தை அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ வெளியிட்டிருக்கின்றார்.

சுமார் 84 ஆயிரம் பேர் கொண்ட இலங்கை பொலிஸ் துறை ஒரு பெரிய ஆளணிக் கட்டமைப்பு. நாட்டின் காவல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நெருக்கடியான பிரச்சினைகளைக் கையாண்டு சமாளிக்கும் ஒரு பிரிவு. அந்த ஆளணியில் மிகக் கணிசமான எண்ணிக்கையானோர் நாட்டில் பெரும்பான்மையான உயிரிழப்புகளுக்குக் காரணமான தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்ற அதிர்ச்சி விவரத்தை அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ குறிப்பிட்டிருக்கிறார்.

தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களில் அதிக சதவீதத்தை பொலிஸ் துறையினர் பதிவு செய்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ, இது பொலிஸ் படையணிக்குள் தடுப்பு சுகாதார நடவடிக்கைகளுக்கான அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது என்று சுட்டுகின்றார்.

கம்பஹா மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை இலங்கைப் பொலிஸ் அதிகாரிகளுக்கான ‘ஆரோக்கியம்’ நடமாடும் சுகாதார மருத்துவத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய அமைச்சர், அரசுத் துறை ஊழியர்களிடையே தொற்றா நோய்ப் பாதிப்புகளில் சுமார் 30 சதவீதம் பொலிஸ் துறையிலிருந்து பதிவாகின்றன என்று குறிப்பிட்டார்.

“சுமார் 84,000 அதிகாரிகளைக் கொண்ட ஒரு பணியாளர் குழு, பொதுத்துறையில் சில மிகப் பெரிய பொறுப்புகளைச் சுமந்து செல்கிறது. அவர்களை ஆரோக்கியமாக வைத்திருப்பது மிக முக்கியமானது. அதே நேரத்தில், பணியில் இருக்கும்போது தொற்றா நோய்களால் கணிசமான எண்ணிக்கையிலான உயிர்கள் பொலிஸ் துறையில்தான் இழக்கப்படுகின்றன” - என்று நளிந்த ஜெயதிஸ்ஸ மேலும் கூறியிருக்கின்றார்.

இருதய நோய்கள், நீரிழிவு நோய், புற்றுநோய்கள் மற்றும் நாள்பட்ட சுவாச நோய்கள் உள்ளிட்ட தொற்றா நோய்கள் இலங்கையின் பொது மக்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க சுகாதாரப் பிரச்சினையாகும். பணியாளர்களின் ஒரு பகுதியாக இருக்கும் அரசு ஊழியர்கள் இந்த நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்

இலங்கையில் இறப்பு, நோயுற்ற தன்மை மற்றும் இயலாமைக்கு தொற்றாத நோய்கள் முக்கிய காரணமாகும். இது நாட்டின் நோய் சுமையில் தோராயமாக எழுபது வீதத்துக்குக் காரணமாக இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

வாழ்க்கை முறை, நடத்தை அபாயங்கள் மற்றும் சுற்றுச்சூழல் வெளிப்பாடுகள் போன்ற காரணிகள் தொற்றா நோய்களுக்குப் பங்களிக்கின்றன. தடுப்பு, ஆரம்பகால கண்டறிதல் மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட பணியாளர்களுக்கு அணுகக்கூடிய சேவைகள் மூலம் தொற்றா நோய்களின் சுமையை நிவர்த்தி செய்ய இலங்கை அரசாங்கம் ஒரு தேசிய கொள்கை மற்றும் மூலோபாய கட்டமைப்பை செயல்படுத்தியுள்ளது. அது வெற்றியளிக்குமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# தொழில் முயற்சியாளர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கல்



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர் இருவருக்கு தையல் இயந்திரங்கள் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

வட மாகாண. தொழிற்துறை திணைக்களத்தால் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கச்சார்வெளியைச் சேர்ந்த நிலக்சன் அக்ஷனா, பெரியபளையைச்சேர்ந்த மதியழகன்சாருஜா ஆகியோருக்கு அரை மானியத் திட்டத்தில் தலா ரூபா 111,557.00 பெறுமதியில் தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதேச செயலர் இ. த. ஜெயசீலன், உதவிப் பிரதேச செயலர் திருமதி ச. குணஜா ஆகியோரால் வழங்கப்பட்டன.





# கச்சதீவு!

இலங்கையின் வடபகுதி இயற்கை வளம் மிக்க நாடு. மக்கள் இயற்கை வளத்தை நம்பி வாழ்கின்றனர். அவர்களின் பிரதான வாழ்வாதாரமாக மீன்பிடி காணப்படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணம் காரைநகர், வேலணை, ஊர்காவற்துறை, பருத்தித்துறை, வல்வெட்டி பகுதிகளிலும் மன்னார் மாவட்டம் பேசாலை, தலைமன்னார் போன்ற இடங்களிலும் முல்லைத்தீவு கரையோர மீனவர்களும் மீன்பிடி தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். அப்படி இருக்க ஏன் தமிழ்நாட்டு அரசியலில் கச்சதீவு ஒரு பேசுபொருளாக இருக்கின்றது என்பதை பார்க்கின்ற போது பல விடயங்களை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

### கச்சத்தீவு என்பது

இந்தியாவின் தமிழ்நாட்டுக்கும் இலங்கையின் வடபகுதிக்கும் இடையில் உள்ள ஒரு சிறிய தீவாகும் இதன் நிலப்பரப்பு 285 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இது சிறிய வறண்ட தீவு எனவும் கூறிக் கொள்ளலாம் இங்கே மனிதர்கள் நிரந்தரமாக தங்கி இருப்பதற்கான வளங்கள் இல்லை.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவில் இருந்து சுமார் 10.5 கடல் மயில் (17கிலோ மீட்டர்) தொலைவிலும் ராமேஸ்வரத்திலிருந்து 12 கடல் மயில் (20 கிலோ மீற்றர்) தொலைவில் அமைந்துள்ளது.

### கச்சதீவு யாருடையது

பழங்காலத்தில் கச்சத்தீவு தமிழ்நாட்டின் இராம நாதபுரம் சேதுபதி மன்னனின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பதை விக்டோரியா மகாராணியின் பிரகடனத்தில் இருந்து இராமநாதபுரம் ஜமீனுக்கு உரியது என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. ஜமீன் மீன்பிடிக்கும் உரிமை, மேய்ச்சல் உரிமையையும் குத்தகைக்கு விட்டு வந்தார் அக்காலத்தில் இந்தியாவின் கட்டுப்பாட்டிலேயே கச்சத்தீவு இருந்தது.

1921 ஆம் ஆண்டு இலங்கை இந்தியாவை ஆட்சி செய்த பிரிட்டிஷ் அரசு கடல் எல்லையை வரையறுக்க முயன்ற போது கச்சதீவு யாருக்கு சொந்தம் என்ற சர்ச்சை எழுந்தது. இலங்கை போர்த்துகீசர்களின் கட்டுப்பாட்டில் கச்சத்தீவு இருந்ததால் தங்களுக்கு சொந்தம் என்று வாதிட்டது. ஆனால் இந்தியா ராம நாதபுரம் ஜமீன் கட்டுப்பாட்டில் இருந்த காரணத்தால் ஆவணங்களை முன்வைத்து தனக்கு சொந்தம் என வாதிட்டது. பேச்சு வார்த்தையில் ஒருமித்த கருத்து எட்டப்படாததால் கடல் எல்லை வரையறுக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

1974 ஒப்பந்தம் இந்திய பிரதமர் இந்திரா காந்தியும் இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவும் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டனர். இதன்போது கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் ஒரு பகுதியாக இந்திய மீனவர்கள் கச்சத்தீவுக்குச் சென்று மீன் பிடி வலைகளை உலர்த்தவும் அங்குள்ள புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் பங்கேற்கவும் விசா இன்றி செல்லலாம் என்ற உரிமை வழங்கப்பட்டது. ஒப்பந்தத்தின் போது கடல் எல்லை வரையறுக்கப்படவில்லை.

1976 ஆம் ஆண்டு மற்றும் ஒரு ஒப்பந்தத்தில் இதன்படி இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழையக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் போது கச்சத்தீவு மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமை பறிபோனது.

பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலும் கடல் எல்லையை "International maritime" boundary line வரையறுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவை மேம்படுத்தவும், சீன நாட்டின் ஆதிக்கத்தை இலங்கை மீது செலுத்துவதைத் தடுக்கும் நோக்கிலும் இந்த ஒப்பந்தங்கள் நிறைவேறின.

ஆனால் தற்போது இலங்கையில் சீனா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு 99 வருடம் குத்தகை விடப்பட்டுள்ளது, கொழும்புத் துறைமுக நிலையம், நுரைச்சோலை அனல் மின் நிலையம் சீனாவிடம் இருந்து கடன் பெற்று கட்டப்பட்டுள்ளது. இலங்கை இந்திய நல்லுறவு பேணப்பட்டாலும் இலங்கை

தொடர்ச்சி▼




# கச்சதீவு!

தொடர்ச்சி▲

இந்தியா எதிர்பார்த்த விடயங்களை இலங்கை கைவிட்டுள்ளது.

**கச்சத்தீவின் வளங்கள்**

கச்சத்தீவு கடலால் சூழப்பட்ட பகுதியாகும், இங்கே அதிகளவான மீன், நண்டு, கணவாய், இறால் கடல் வாழ் உயிரினங்களும் பவளப்பாறை களும் காணப்படுகின்றது. இங்கு விளையும் சங்குகள் புகழ் பெற்றனவாகும். இங்கு மனிதர்கள் நிரந்தரமாக வாழ்வதற்கு ஏற்ற குடிநீர், விவசாயம் செய்வதற்கேற்ற நிலவளம் இல்லாத வறண்ட தீவு. இதனை சுற்றியுள்ள கடற்பகுதிகளில் கடல் வாழ் உயிரினங்களின் உடைய இனப்பெருக்கம் அதிக மாக இருக்கின்றது. இதைவிட பழமையான புனித அந்தோனியார் ஆலயத்தை கொண்டிருப்பதனால் கடல் வளம் மற்றும் ஆன்மீக கலாச்சார முக்கியத் துவம் வாய்ந்த இடமாக திகழ்கின்றது.

**ஒப்பந்தத்தின் பின்னும்**
**இந்திய மீனவர்கள் வருகை**

இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த மக்களின் பிர தான தொழில் மீன்பிடி யாகும் அவர்களின் பாரம்பரிய மான மீன்பிடி இடமாக கச்சத்தீவு காணப்படு கின்றது. மீன்வளம் செழிப்பான பகுதி என்பதாலும், தமது பகுதியில் மீன்வளம் குறைவடைந்துள்ளமை யால் ஒப்பந்தத்தின் பின்னும் கச்சத்தீவை அண்டிய பகுதிகளுக்கு அவர்களுடைய வாழ்வாதாரத்துக்காக உயிர் ஆபத்துக்கள் அச்சுறுத்தல்கள் காணப்பட்டாலும் தொடர்ந்து வருகின்றனர். சிலர் எல்லை தெரியா மலும் வருகை தருவது உண்டு.

இலங்கை மீனவர்கள் இந்திய மீனவர்களை தடுப்பதற்கான காரணம் இலங்கை வாழ் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமாகவும் பிரதான தொழி லாகவும் மீன்பிடி பகுதியாக கச்சத்தீவு காணப்படு கின்றது. இவர்கள் கடல் வளத்துக்கு பாதிப்பு ஏற்படுத் தாத வகையில் கடல் வளத்தை பயன்படுத்தி வரு கின்றனர். இவ்வாறு இருக்க இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் பெரிய படகு, நவீன மீன் பிடிப்படகுகள், இழுவை படகுகள் மீன்களின் முட்டைகள், இளம் மீன்கள் கடலடி தாவரங்கள், முருங்கை கற்பாறை களை பாதிப்பதனால் இலங்கை மீனவர்களின் இறையாண்மையை பாதிக்கின்றது. கச்சத்தீவை சுற்றியுள்ள பகுதிகளில் நீர் மாசு, கடல்வாழ் உயிரின ஆபத்து, எண்ணெய் கசிவால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது.

தொடர்ந்தும் எல்லையை தாண்டிய அத்துமீறல் களால் மோதல், காயமடைதல், உயிர் இழப்பு, படகு சேதமடைதல் போன்றன அடிக்கடி இடம்பெறு வதும், இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதும் பின்னர் அவற்றுக்கு மன்னிப்பு கோரி விடுதலை செய்யப்படுவதும் இலங்கை கடற்படையினரால் அத்துமீறி உள்நுழையும் படகுகள் தாக்கப்படுதல், இந்திய மீனவர்களால் கடற்படை மற்றும் இலங்கை மீனவர்கள் தாக்கப்படுதல், இலங்கை மீனவர்களின் வலைகள் வெட்டுப்படுதல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறுவது பழகிப்போன விடயம் ஆகிவிட்டது.

ஆனால் தற்போது தமிழக வெற்றிக் கழகத்தி னுடைய தலைவர் விஜய் இரண்டாவது மாநாட்டில் கச்சத்தீவை இலங்கையிடமிருந்து மீட்டுத்தரும்படி நரேந்திர மோடியிடம் கோரிக்கையை விடுத்தார். இவ் விடயம் பல சமூக ஊடகங்களில் பேசுபொருளாக் கப்பட்டிருந்தது. இந்த பேசு பொருளுக்கு பதிலடி கொடுக்கும் முகமாக யாழ் வருகை தந்த இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கச்சத்தீவு சென்று அதை பார்வையிட்டு வந்திருந்தார். இதுவே கச்சத் தீவு பற்றிய விடயங்கள் அதிகம் பேசப்படுவதற்கான காரணமாக அமைந்தது. இல்லாத ஒரு பிரச்சினை தேர்தல் காலத்தில் பிரச்சாரங்களை மேற்கொள்வ தற்காக பல வருடங்களாக பேசப்படுகின்றது. இதனால் மீனவனே பாதிக்கப்படுகின்றான்.

தேர்தல் காலத்தின் பேசு பொருளாக மட்டும் இருக்குமா? அல்லது இதற்கான ஒரு தீர்வு கிடைக் குமா?

**செ. அனுத்திரா,**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



# ‘ஹெல்ப் ஏஜ்’ நிறுவனத்தின் நடமாடும் மருத்துவ முகாம்



வேலணைப் பிரதேச செயலக ஏற்பாட்டில் ‘ஹெல்ப் ஏஜ்’ நிறுவனத்தின் அனுசரனையுடன் பிரதேச செயலக சமூக சேவைக் கிளையினரால் ஒழுங்கு படுத்தப்பட்ட முதியோர்களுக்கான நடமாடும் மருத்துவ முகாம் சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மண்டபத்தில் பிரதேச செயலாளர் த.அகிலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சரவணை கிராம முதியோர் சங்கத்தினர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் முதியோர் பயனாளிகள் கலந்து கொண்டனர்.








# இலங்கை சீனோர் நிறுவனத்தினுடைய செயற்பாடு எதிர்வரும் 18இல் ஆரம்பம்!

இலங்கை சீனோர் நிறுவனத்தினுடைய (Cey-Nor foundation Ltd) காரைநகர், யாழ்ப்பாணத்தில் அமையப்பெற்றுள்ள தொழிற்சாலைகளது செயற்பாடுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

பைபர் (Fiber) மூலப் பொருளைக் கொண்டு அனைத்து வகையான பொருள்களையும் உற்பத்தி மற்றும் பரும்படியாக்கம் செய்து சந்தைப்படுத்தும் செயன்முறையை மேற்கொள்ளும் முகமாக இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

அதற்கான ஆயத்த வேலைகள் கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகி முன்னோட்டமாக படகு, மீன் விற்கும் தாங்கி, மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டி என்பன உற்பத்தியாக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனம் கடல்தொழில் சார் பொருள்களை உற்பத்தி மற்றும் பரும்படியாக்கும் நோக்கத்துடனேயே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் தற்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலை அதிக கேள்வியுள்ள ஏனைய பைபர் மூலப் பொருள்சார் பொருள்களையும் தயாரிக்கத் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தின் கடற்றொழில் சார் உபகரணத் தேவைகளைத் தன்நிறைவோடு வழங்கும் நிலையமாக இது அமையும். இதன்வழி சுமார் 100 – 150 திறன் வேலை வாய்ப்புகள் உருவாகச் சாத்தியமுள்ளது.

தற்போதைய நிலையில், சாதாரண கட்டுமரம் அளவிலான தோணி முதல் 30 அடி நீளமான படகுகள் வரை, 1 – 2 மீற்றர் வரையான விட்டம் கொண்ட மீன் வளர்ப்புத் தொட்டிகள், மீன் விற்கும் வண்டிகளில் பொருத்துவதற்கான குளிரூட்டக்கூடிய பெட்டி என்பன இங்கு தயாரிக்க ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இந்தத் தொழிற்சாலை தொழிற்பட அடித்தளமாக இருந்து செயற்பட்ட அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

குறித்த தினத்தில் தயாரிப்புகளின் மாதிரிகளை மக்கள் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.







# ‘பெயார்மெட்’ நிதிய வேலைத் திட்டங்களை பிரதேச செயலகங்களுக்கு விரிவுபடுத்துக!

## யாழ். அரச அதிபர் பிரதீபன் கோரிக்கை



யாழ்.மாவட்டத்தில் ‘பெயார்மெட்’ (FAIRMED) நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களை அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் செயற்படுத்துமாறு தலைமை அதிகாரியிடம் யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுவிஸிலிருந்து வருகை தந்த ‘பெயார்மெட்’ (FAIRMED ) தலைமை அதிகாரி பபியோ மொலினறிக்கும் அரச அதிபருக்கும் இடையிலான திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

சமூகத்தில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான பல நிகழ்ச்சித் திட்டங்களை “பெயார்மெட்” முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் மாற்றுத் திறனாளிகளின் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்தல், அணுகு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், வாழ்வாதாரம், குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மருத்துவ வசதிகளை வழங்குதல் போன்ற திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக அரச அதிபருடன் தலைமை அதிகாரி கலந்துரையாடினார்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் “பெயார்மெட்” நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களுடன் தீவகப் பகுதியில் மேலும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 09 பிரதேச செயலக பிரிவுகளிலேயே இந்த நிதியத்தின் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் ஏனைய 06 பிரதேச செயலக பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துமாறும் கோரிக்கை முன்வைத்தார். இதன் போது அரச அதிபரின் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிப்பார் என்று தலைமை அதிகாரி தெரிவித்தார்.

கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் க. சிவகரன், ‘பெயார்மெட்’ இலங்கைக்கான இணைப்பாளர் வைத்திய கலாநிதி நயனி சூரியாராச்சி, சமூக சேவை திணைக்கள மாவட்ட இணைப்பாளர் தி. உமாசங்கர், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி கி. தயாபரி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந. தயாபரன், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.அமலன், ‘பெயார்மெட்’ திட்ட உத்தியோகத்தர் திருமதி. ஞா. பிரியரஜனி கள இணைப்பாளர் . அ. றொணி ஆகியோர் கலந்து கொண்டனர் .

# கோட் டெல்லேஜ் கலமுண்டு வீதியை திருத்தும் பணிகளை ஆரம்பிக்குக!

## அரச அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை

**(செ.தி.பெருமாள்)**

ஏழு கன்னி மலைத்தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ள கோட் டெல்லேஜ் கலமுண்டு வீதியை திருத்தும் பணிகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பகமுவ பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஏழு கன்னி மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ள கோட்டெல்லேஜ் கிராமத்துக்குச் செல்லும் கடினமான கலமுண்டுன கொட்டெல்லேஜ் மக்கள் குன்றும் குழியுமாக உள்ள வீதியால் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட 200 சிங்கள மற்றும் தமிழ் குடும்பங்கள் வாழ்கின்றன. பெரும்பான்மையானவர்களின் வாழ்வாதாரம் விவசாயம்.

கொட்டெல்லேஜ் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்துக்கு அருகில் தொடங்கும் கொட்டெல்லேஜ் கலமுண்டுன வீதி, கலமுண்டுன, மியான பலாவ, தெனிய ஹேன மற்றும் வகுரா ஆகிய வீதியின் சுமார் 600 மீற்றர் பகுதி முன்னைய அரசால் கொங்கிரீட் மூலம் அபிவிருத்தி செய்யப்பன்றியுள் நிலையில் நடந்து செல்ல முடியாத அளவுக்கும் உள்ளது.

இந்தக் கிராமங்களில் இருந்து நோய் வாய்ப்பட்டவர்கள் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளை அழைத்துச் செல்ல பிரதான வீதிக்கு வரும்போது பல்வேறுபட்ட துன்பங்களை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இந்தப் பகுதியில் உள்ள மாணவர்களும் பெரும் சிரமம் அடைகின்றனர்.

பாழடைந்த கொட்டெல்லேஜ் கலமுண்டுன சாலையை கொங்கிரீட் மூலம் உடனடியாக செப்பனிட்டு தருமாறு கிராம மக்கள் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.






# தென்மராட்சி பிரதேச செயலகத்தின் 2025இற்கான பண்பாட்டுப் பெருவிழா

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டு பெருவிழா நேற்று முன்தினம் சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும் தென்மராட்சி பிரதேச கலாசார பேரவையும் இணைத்து நடத்திய 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டு பெருவிழா பிரதேச செயலாளரும் பிரதேச கலாசார பேரவை தலைவருமான எப்.சி. சத்யசோதி தலைமையில் சாவகச்சேரியின் மூத்த நாதஸ்வர கலைஞர் அமரர் பஞ்சாபிகேஷன் அரங்கில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.காண்டீபன், கௌரவ விருந்தினராக மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் திருமதி வி.சுகுணலினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல் வகையான கலாசார நிகழ்வுகளுடன் கலைஞர்களுக்கான ‘கலைச்சாகரம் விருது நால்வருக்கும்’ மற்றும் ‘இளங் கலைஞர்’ விருதுகள் மூவருக்கும் அரச அதிபரால் வழங்கப்பட்டன. கலை இலக்கியப் போட்டிகளின் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.









# சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் புதிய சிற்றுண்டிச் சாலை திறந்துவைப்பு!





(தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறை பொலிஸ் நிலைய வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டி சாலை செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய முன்னால் பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத் தலைமையில் நடைபெற்றது.

பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் வசதியான சேவையை வழங்கும் நோக்கில் இந்தச் சிற்றுண்டி சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச். கலனசிறி, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக டபிள்யூ.ஏ.என். பிரதிப் குமார, சம்மாந்துறை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சிற்றுண்டி சாலை நிர்மாணிப்பதற்கான வேலைத் திட்டம் ஆர்.எஸ்.எச். லங்கா சோலர் நிறுவனத்தின் தவிசாளர் எம்.எஸ்.எம்.றியால் தலைமையிலான குழுவினரால் பொறுப்பேற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில்

# புலமைப் பரிசில் சித்திபெற்ற மாணவனுக்கு சைக்கிள் வழங்கிய பிரதி முதல்வர் தயாளன்!





யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவன் ஒருவருக்கு, பாடசாலையில் பழைய மாணவரும் யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வருமான இ. தயாளன் சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் காலை ஒன்றுகூடல் நிகழ்வில் வைத்து சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது.

தரம் 5 சித்தி பெற்ற மாணவர்கள் அனைவரும் இந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.

இந்த மாணவர்களுக்கு 1986 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் மற்றும் 1989 உயிர்தர மாணவர்கள் இணைந்து தலா 2000 ரூபா வீதம் வழங்கியுள்ளனர்.

# மூதூர் பிரதேச செயலர் பிரிவில் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கல்

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அனுசரணையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உள்நாட்டு யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால் பிறப்புச் சான்றிதழ் பெறாமல் இருந்த மூதூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேரர்ந்த 80 நபர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு காணி ஆவணங்கள் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் இதன்போது வருகை தந்தோருக்குத் தெளிவூட்டல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவை இடம்பெற்று இதன் மூலம் அவர்களது தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில் பிறப்புச் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண பிரதி பதிவாளர் நாயகம், மூதூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், மூதூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.










# 2024ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்களுக்குக் கௌரவிப்பு

2024 ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலை ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை மாணவர்கள் கொமர்சல் வங்கியின் வடபிராந்திய கிளையினரால் கௌரவிக்கப்பட்டனர்.

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரீட்சையில் சித்தியெய்திய யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் கொமர்சல் வங்கியில் அருணலு அல்லது இசுறு சேமிப்பு கணக்கை பேணும் பாடசாலை ரீதியில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதல்கள் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

பாடசாலை ரீதியில் முறையே முதல் நிலை மாணவருக்கு 10,000 ரூபாவும் இரண்டாம் நிலை மாணவருக்கு 7500 ரூபாவும் மூன்றாம் நிலையைப் பெற்ற மாணவருக்கு 5000 ரூபாவும் பணப்பரிசில்களும் சான்றிதலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். யாழ் மாவட்டத்தை சேர்ந்த 105 மாணவர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் அருளம்பலம் ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி கடம்பேஸ்வரன் மணிமார்பன், வட மாகாண ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் அன்னலிங்கம் இரவீந்திரன், மற்றும் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் வாசுதேவன் மற்றும் யாழ். மாவட்ட கொமர்ஷல் வங்கி கிளைகளின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சாதனை புரிந்த மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

















# இந்தியாவின் 15 ஆவது துணை குடியரசு தலைவரானார் சி.பி.ராதாகிருஷ்ணன்!

இந்தியாவின் 15 ஆவது துணை குடியரசுத் தலைவராக சி.பி.ராதா கிருஷ்ணன் பதவியேற்றார். அவருக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் குடியரசு முன்னாள் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் பங்கேற்றது கவனம் பெற்றது.

குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜகதீப் தன்கர் உடல்நிலை காரணமாக கடந்த ஜூலை 21 ஆம் திகதி பதவியை ராஜினமா செய்தார். இதை அடுத்து, அந்த பதவிக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டது.

ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி, மகாராஷ்டிர ஆளுநராக இருந்த வரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான சி.பி ரதாகிருஷ்ணனைக் களமிறக்கியது. இதையடுத்து, எதிர்க்கட்சிகளின் கூட்டணியான இண்டியா கூட்டணி சார்பில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற சுதர்சன் ரெட்டியை களமிறக்கியது. கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில், சி.பி. ராதா கிருஷ்ணன் 152 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இதையடுத்து, குடியரசு துணைத் தலைவராக இன்று அவர் பதவியேற்றார். குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்தப் பதவியேற்பு விழாவில், குடியரசு தலைவர் திரவுபதி முர்மு அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். கடவுளின் பெயரால் சி.பி. ராதாகிருஷ்ணன் ஆங்கிலத்தில் பதவியேற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தலைவர் ஜே.பி. நட்டா, குடியரசு முன்னாள் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர், வெங்கையா நாயுடு, ஹமீத் அன்சாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆற்றில் குளித்த போது தவறி வீழ்ந்த சிறுவரை துணிந்து காப்பாற்றிய பெண்ணுக்குப் பாராட்டு!



திருவாரூர் மாவட்டம் திருநாட்டியாத்தங்குடி பிரதான சாலை பகுதியைச் சேர்ந்தவர் கலியபெருமாள் மனைவி மாங்கனி (வயது - 39) தனது வீட்டுக்கு எதிரில் உள்ள வெள்ளையாற்று தடுப்பணை பகுதியில் குளிக்கச் சென் நிலையில் ஆற்றில் தவறி விழ்ந்த இரண்டு சிறுவர்களைத் துணச்சலுடன் மீட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த சி.; ஹேம்சரண் (வயது -10), பெரும்புகலூர் பகுதியைச் சேர்ந்த க. கவியரசன் (வயது -11) ஆகியோரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

ஆற்றின் கீழ் படிக்கட்டில் அமர்ந்து குளித்துக்கொண்டிருந்த கவியரசன் திடீரென கால் வழுக்கி ஆற்றுக்குள் விழுந்தார். அப்போது, அருகில் இருந்த ஹேம் சரணின் கையைப் பிடித்து இழுத்த நிலையில், அவரும் ஆற்றுக்குள் விழுந்தார். இதையடுத்து, சிறுவர்களின் அலறல் சத்தம் கேட்ட மாங்கனி, உடனடியாக ஆற்றில் குதித்து, தத்தளித்துக்கொண்டிருந்த சிறுவர்களை காப்பாற்ற முயற்சித்தார்.

அப்போது, ஆற்றில் தண்ணீரின் வேகம் அதிகமாக இருந்ததால், இருவரையும் அவரால் கரைக்கு கொண்டு வர முடியவில்லை. ஆனாலும், மாங்கனி தன் உயிரை பணயம் வைத்து, இருவரையும் மேட்டுப் பகுதிக்கு இழுத்து வந்து கூச்சலிட்டார். இதைக்கண்டு, அவ்வழியாக சென்று கொண்டிருந்த சிலர் ஓடிவந்து, அவர்களை மீட்டு, கரைக்கு கொண்டுவந்தனர். இதில், ஆற்று நீரைக் குடித்து பாதிக்கப்பட்டிருந்த கவியரசன், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தற்போது நலமுடன் உள்ளார்.

இதையடுத்து மாங்கனிக்கு பாராட்டுகள் குவிகின்றன.

இதையறிந்த, தமிழக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, தனது 'எக்ஸ்' பக்கத்தில், மாங்கனிக்கு வாழ்த்து தெரிவித்து, "பிறருக்கொரு துயரெனில் முன்னின்று காப்பது தமிழர்களின் இயல்பு, பண்பு. அப்பண்பின் தைரிய மிகு இலக்கணமாய் திகழும் சகோதரி மாங்கனிக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும்" என பதிவிட்டுள்ளார்.



# ஆனைமலை ஆறு - நல்லாறுத் திட்டத்தை கேரள அரசிடம் பேச்சு நடத்தி நிறைவேற்றுக

### அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கோரிக்கை

கேரள அரசிடம் பேச்சு நடத்தி, ஆனைமலை ஆறு - நல்லாறுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார்.

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்த மடத்துக்குளத்தில் அவர் உரையாற்றுகையில்,

ஆனைமலை ஆறு - நல்லாறு அணை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது கோவை, திருப்பூர் மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கை. தமிழகத்தை ஆளும் திமுகவும், கேரளாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியும் இண்டியா கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. எனவே, கேரள அரசிடம் தமிழக முதல்வர் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வுகாண வேண்டும்.

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் திமுக துரோகம் இழைத்து வருகிறது. தமிழகத்தில் அதிமுக ஆட்சியின்போது குடிமராமத்து திட்டத்தின் கீழ் 26,000 குளம், குட்டைகள் தூர் வாரப்பட்டன. மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்ததும் தாலிக்கு தங்கம் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு, மணமகளுக்கு பட்டுச்சேலையும், மணமகனுக்கு பட்டு வேட்டியும் வழங்கப்படும்.

தமிழகத்தில் ஏழை மாணவர்கள் கல்விக்காக ரூ.7,200 கோடியில் 52 லட்சம் பேருக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது. இத்திட்டத்தை திமுக அரசு ரத்து செய்துவிட்டது. மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்ததும் இந்தத் திட்டமும், மடத்துக்குளம் தொகுதி விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையான அப்பர் அமராவதி அணை திட்டமும் நிறைவேற்றப்படும். - என்றார்.

# சட்டப்பேரவைத் தேர்தலில் கமல்ஹாசன் போட்டியிடுவது தொடர்பில் ஆலோசனை

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக கமல்ஹாசன் தலைமையில் மநீம கட்சியினர் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

கடந்த 2024 மக்களவை தேர்தலில் இண்டியா கூட்டணியில் மநீம இடம் பெற்றது. அப்போது, அக்கட்சிக்கு மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்குவதாக திமுக தெரிவித்தது. அந்தத் தேர்தலில், திமுக உள்ளிட்ட கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் கமல்ஹாசன் சூறாவளி பிரச்சாரம் செய்தார். இது வேட்பாளர்களின் வெற்றிக்கு மேலும் பலம் கூட்டியது.

சமீபத்தில் மாநிலங்களவை எம்.பியாக கமல்ஹாசன் பதவியேற்றதை தொடர்ந்து, சட்டப்பேரவை தேர்தலில் மநீம கட்சியினர் கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர். அந்த வகையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக கட்சித் தலைவர் கமல்ஹாசன் தலைமையில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது. சென்னையில் உள்ள முத்தமிழ் பேரவை அரங்கில் 4 நாள்களும் காலை, மாலை என இரு அமர்வில் மண்டல வாரியாக ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.



தமிழகத்தின் 61 தொகுதிகளில் மநீமவுக்கு செல்வாக்கு இருப்பதால், இதில் ஏதேனும் சில தொகுதிகளில் போட்டியிடலாம் என்று நிர்வாகிகள், தொண்டர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து ஆலோசனை நடத்த உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.



# அமெ. குடியரசின் மூத்த தலைவர் படுகொலைக்கு ட்ரம்ப் கண்டனம்!

அமெரிக்காவில் குடியரசு கட்சி ஆட்சி நடத்தி வருகிறது. ஆளும் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சார்லிகிக், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது குடியரசு கட்சிக்கு ஆதரவாக மிகத் தீவிரமாக பிரச்சாரம் செய்தார்.

கடந்த 10 ஆம் திகதி அமெரிக்காவின் யூட்டா மாகாணம், ஓரமில் உள்ள யூட்டா பள்ளத்தாக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சார்லி கிக் பங்கேற்றார். அப்போது மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் அவர் உயிரிழந்தார்.

இது குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,

சார்லி கிக்கின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறேன். கடந்த ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது என் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினேன். இடதுசாரி அரசியல் வன்முறை அதிகரித்து வருகின்றன.

இந்த வன்முறையால் அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர். இதை தடுத்து நிறுத்த வேண்டும். அமெரிக்க நீதிபதிகள், பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் வலதுசாரி சிந்தனை கொண்டவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.



# நேபாள ஆர்ப்பாட்டத்தில் தப்பிய கைதிகளில் ஒருவர் மட்டும் சரண்!

நேபாளத்தில் அரசுக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை அடுத்து நாட்டில் உள்ள 25 இற்கும் மேற்பட்ட சிறைச்சாலைகள் உடைக்கப்பட்டு 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் தப்பி ஓடினர்.

இதில் நேபாளத்தின் தொலைதூர வடக்கு மாகாணமான கைலாலியின் தலைநகர் தங்காடியில் உள்ள சிறையும் உடைக்கப்பட்டு கைதிகள் தப்பி ஓடினர். இந்த சிறையில் இருந்து சுமார் 692 சிறைக்கைதிகள் தப்பி ஓடினர். தப்பித்துச் சென்ற ஒரு சில நாள்களில் ஒரேயொரு கைதி மட்டும் மீண்டும் சிறைக்கு திரும்பியுள்ளார்.

அடுத்த அரசு அமைக்கப்பட்ட பிறகு, தண்டனைக் காலம் இரண்டு மடங்காக அறிவிக்கப்படலாம் என்ற அச்சத்தில் திரும்பி வந்தார் என்று அவர் தெரிவித்துள்ளார். தன்னுடைய தவறு எனக்கூறி சிறையில் சரணடைந்துள்ளார். ஆனால் அதிகாரிகள் அவரது அடையாளத்தை வெளியிடவில்லை.

இந்த நிலையில் பொலிஸார் மீண்டும் அவரைக் கைது செய்து, சிறையை உடைத்து தப்பிச் சென்றதாகப் புதிய குற்றாட்டுக்கு ஆளானால், தண்டனை மேலும் அதிகமாகவும் என்பதை உணர்ந்து சரணடைந்துள்ளார்.



# இந்திய வம்சாவளி நபர் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை!

அமெரிக்காவில் இந்திய வம்சாவளி நபர் ஒருவர் டல்லாஸ் மோட்டலில் கொடூரமாகக் கொல்லப்பட்டார். 50 வயதான சந்திரமௌலி நாகமல்லையா எனும் நபர், வாக்குவாதத்தால் ஏற்பட்ட தகராறில் அவரது மனைவி மற்றும் மகன் முன்னிலையில் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

டெக்சாஸின் டெனிசன் கோல்ஃப் மைதானத்துக்கு அருகில் இன்டர்ஸ்டேட் 30 இல் அமைந்துள்ள டவுன்டவுன் சூட்ஸ் மோட்டலில் இந்த கொடூர சம்பவம் நடந்தது. இந்தக் கொலை சம்பந்தமாக டல்லாஸ் பொலிஸார் யோர்டானிஸ் கோபோஸ்-மார்டினெஸ் என்பவரை கைது செய்தனர். அவர் பிணையில் வெளிவர முடியாத வகையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அளித்த வாக்குமூலத்தின்படி, நாகமல்லையா, மோட்டல் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, கோபோஸ்-மார்டினெஸ் மற்றும் அவருடன் வந்த பெண் சக ஊழியரை அணுகினார். ஏற்கனவே உடைந்திருந்த சலவை இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று நாகமல்லையா அவர்களிடம் கூறியுள்ளார்.

இதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தில், கோபமடைந்த கோபோஸ்-மார்டினெஸ் மோட்டலின் வாகன நிறுத்துமிடத்தில் நாகமல்லையா துரத்தி சென்று கத்தியால் குத்தினார். நாகமல்லையாவின் மனைவியும் மகனும் வெளியே ஓடி வந்து தடுக்க முயன்றபோதும், அவர்களை தள்ளி விட்டு கடுமையாக தாக்கினார். இதன் பின்னர் அவரின் தலையை துண்டித்து, உதைத்து தள்ளி குப்பைத் தொட்டியில் வீசினார். இதுதொடர்பான சிசிடிவி காட்சிகளும் கிடைத்துள்ளன.

பொலிஸாரின் தகவல்களின்படி, நாகமல்லையாவைக் கொல்ல கோபோஸ்-மார்டினெஸ் கத்தியைப் பயன்படுத்தியதாக ஒப்புக்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து ஹூஸ்டனில் உள்ள இந்திய துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

‘டல்லாஸ், டெக்சாஸில் உள்ள தனது பணியிடத்தில் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளார். இந்திய வம்சாவளியை சேர்ந்த நாகமல்லையாவின் துயர மரணத்துக்குக் ஹூஸ்டன் இந்திய துணைத் தூதரகம் இரங்கல் தெரிவிக்கிறது. நாங்கள் அவர்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்கிறோம், மேலும் சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்குகிறோம். குற்றம் சாட்டப்பட்டவர் டல்லாஸ் பொலிஸ் தடுப்பில் உள்ளார். இந்த விஷயத்தை நாங்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம்’ என்று தெரிவித்துள்ளது.

# சீனர்களைப் பணியமர்த்துவதற்கு தடை விதித்துள்ளது நாசா!


சீனாவைச் சேர்ந்தவர்களைப் பணியமர்த்துவதற்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா தடை விதித்துள்ளது.

இது குறித்து நாசா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சீனர்களாக இருந்து, அமெரிக்க விசா வைத்திருந்தாலும் அவர்கள் தங்களது மையங்களுக்குள் நுழைய முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், உலகின் முன்னணி விண்வெளி ஆய்வு மையங்களின் ஒன்றான நாசாவில் பணியாற்றும் வாய்ப்பு சீனர்களிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

நாசாவில் ஒப்பந்ததாரர்களாகவோ அல்லது ஆராய்ச்சியில் பங்களிக்கும் மாணவர்களாகவோ மட்டுமே சீனர்கள் பணியாற்ற முடியும் என்று தெரிவித்துள்ளது.



பக்கங்கள் 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 12/09/2025

குழந்தைகள் காப்பகத்துக்குள் பாய்ந்த கார்; குழந்தை பலி



03



# தற்காலிக குடியிருப்பாளர்கள் எண்ணிக்கை மேலும் குறைக்கப்படுமென கனடா அறிவிப்பு

**கனடாவில் வாழும் தற்காலிக குடியிருப்பாளர்கள் எண்ணிக்கை மேலும் குறைக்கப்படும் என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.**

**2027ஆம் ஆண்டின் இறுதிவாக்கில், கனடாவில் வாழும் தற்காலிக குடியிருப்பாளர்கள் எண்ணிக்கை மேலும் குறைக்கப்படும் என கனடா பிரதமரான மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**இந்த எண்ணிக்கையில், சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையும் அடங்கும்.**

பல நாடுகளைப்போலவே, கனடாவிலும் புலம்பெயர்தலுக்கு எதிரான கருத்துக்கள் அதிகரித்து வரும் நிலையில், பிரித்தானியா முதலான பல நாடுகளில் புலம்பெயர்தல், அரசியல் வட்டாரம் வரை முக்கிய பேசுபொருளாகிவருகிறது.

இந்நிலையில் ஆல்பர்ட்டா மாகாண தலைநகரான எட்மண்டனில் கட்சிக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய கனடா பிரதமர் மார்க் கார்னி, அவரது தலைமையிலான அரசு, கனடாவில் புலம்பெயர்தலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் என்று கூறியுள்ளார்.

அவ்வகையில், தற்காலிகப் பணியாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்கள் உட்பட கனடாவில் வாழும் தற்காலிக குடியிருப்பாளர்கள் எண்ணிக்கை, 2027ஆம் ஆண்டின் இறுதிவாக்கில், சுமார் 5 சதவிகிதமாக குறைக்கப்படும் என மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம், வரும் வாரங்களில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட இருக்கும் புலம்பெயர்தல் திட்டத்தில் எதிரொலிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடாவின் பிரச்சினைகளுக்கு ஏமாற்று முதலாளிகள் காரணம்

## புலம்பெயர்தல் ஆதரவு அமைப்பு தகவல்

கனடாவின் பிரச்சினைகளுக்குக் காரணம் புலம்பெயர்ந்தோர் அல்ல, கார்ப்பரேட் நிலச்சுவான்தாரர்களும், பெரிய பல்பொருள் அங்காடிகளும், ஏமாற்றுக்கார முதலாளிகளும்தான் காரணம் என்கிறது புலம்பெயர்தல் ஆதரவு அமைப்பொன்று.

Migrant Workers Alliance for Change என்னும் புலம்பெயர்தல் ஆதரவு அமைப்பின் இயக்குநர்களில் ஒருவரான கேரன் (Karen Cocq), கனடாவில் நிலவும் சில பிரச்சினைகளுக்கு,




அநியாயமாக புலம்பெயர்ந்தோர் மீது பழி போடப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

கனடாவில் நிலவும் வீடுகள் தட்டுப்பாடு, விலைவாசி போன்ற பிரச்சினைகளுக்கு, கார்ப்பரேட்

02





# தற்காலிக வெளிநாட்டு வேலைவாய்ப்பில் முக்கிய மாற்றங்களை அறிவித்தது கனடா

கனடா அரசு தற்காலிக வெளிநாட்டு வேலைவாய்ப்பு திட்டத்தில் (Temporary Foreign Worker Program) முக்கிய மாற்றங்களை அறிவித்துள்ளது.

இந்த திட்டம் வெளிநாட்டு நபர்களை வேலைக்கு அமர்த்த கனடா நிறுவனங்களுக்கு வழங்கப்படும் முக்கிய வழியாகும்.

ஆனால், கடந்த 18 மாதங்களில், இந்த திட்டத்தின் பயன்பாட்டை குறைக்கும் வகையில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டம் குறிப்பிட்ட பிராந்தியங்கள் மற்றும் துறைகளின் தேவைகளை இலக்காக கொண்டிருப்பது அவசியம் என பிரதமர் மார்க் கார்னி லிபரல் கட்சி கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் திட்ட மாற்றங்கள் குறித்து உறுதிப்படுத்தினாலும், முழுமையான விவரங்களை வெளியிடவில்லை.

TFWP மாற்றங்களின் முக்கிய அம்சங்கள்:

2025-ல் 82,000 புதிய TFWP அனுமதிகள் இலக்காக நிர்ணயம்

வேலைவாய்ப்பு வீழ்ச்சி 6 சதவீதத்திற்கு மேல் உள்ள பகுதிகளில் குறைந்த ஊதிய LMIA செயலாக்கத்திற்கு தற்காலிக தடை விதிக்கப்படும்

மேலும், உயர் ஊதிய வேலைகளுக்கான ஊதிய வரம்பை பிராந்திய சராசரியை விட 20 சதவீதமாக உயர்த்துதல்

நிறுவனங்கள் TFWP ஊழியர்களை அமர்த்தும் வரம்பு குறைக்கப்படும்

மேலும், spousal open work permits (SOWP) வழங்கும் விதிமுறைகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன. இப்போது TEER 0, TEER 1 மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட TEER 2, TEER 3 வேளைகளில் உள்ளவர்களின் துணைவியருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

மேலும், TFWP அனுமதி குறைந்தபட்சம் 16 மாதங்கள் இருக்க வேண்டும்.

2025 ஜனவரி-ஜூன் காலத்தில் TFWP அனுமதிகள் 50 சதவீதம் குறைந்துள்ளன. மொத்தமாக 33,722 புதிய அனுமதிகள் மேட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்,இந்த மாற்றங்கள் கனடாவின் வேலை சந்தையை பாதுகாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலச்சுவான்தாரர்களும், பெரிய பல்பொருள் அங்காடிகளும், ஏமாற்றுக்கார முதலாளிகளும்தான் காரணமேயொழிய புலம்பெயர்ந்தோர் அல்ல என்கிறார் கேரன்.

தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர்களால் கனேடிய இளைஞர்களின் வேலைவாய்ப்புகள் பறிக்கப்படுவதாக கன்சர்வேட்டிவ் கட்சியினர் குற்றம் சாட்டுவதைக் குறித்து கேள்வி எழுப்பும் அவர், புலம்பெயர்ந்தோர் விவசாயம், மீன் பண்ணைகள் மற்றும் ட்ரக் தொழிலில் மட்டுமே ஈடுபடுகிறார்கள்.

இந்த பணிகளை, அதுவும் கோடைக் காலத்தில் செய்ய எந்த கனேடிய இளைஞரும் முன்வருவதில்லை என்கிறார்.

அரசியல்வாதிகள், புலம்பெயர்ந்தோருக்கு எதிரான இனவெறுப்பை மக்களைப் பிரித்து, மக்களின் கோபத்தையும் விரக்தியையும் ஒருவருக்கொருவர் எதிராகவும், தொழிலாளர்கள் மீதும் திருப்புவதற்கு பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்கிறார் அவர்.

புலம்பெயர்தலுக்கான ஆதரவு குறைந்து வருவது, கனடாவுக்கு புதிதாக வருவோருக்கு பாதுகாப்பு குறித்த கவலைகளை எழுப்புகிறது என்று கூறும் கேரன், அவர்கள் வன்முறையையும் வெறுப்பையும் எதிர்கொள்ளும் நிலையையும் அது உருவாக்குகிறது என்றும் கூறியுள்ளார்.

அரசியல்வாதிகள் பிரச்சினைகளை தீர்க்க தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு பதிலாக, புலம்பெயர்ந்தோருக்கு எதிரான உணர்வை மக்கள் கவனத்தை திசை திருப்ப பயன்படுத்துகிறார்கள், ஆனால், நிஜ வாழ்க்கையில் அது மோசமான தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.




# குழந்தைகள் காப்பகத்துக்குள் பாய்ந்த கார்; குழந்தை பலி

கனடாவின் ஒன்ராறியோவில் அமைந்துள்ள குழந்தைகளுக்கான பகல் நேரக் காப்பகம் ஒன்றிற்குள் கார் ஒன்று பாய்ந்த சம்பவத்தில் ஒரு குழந்தை பரிதாபமாக பலியாகியுள்ளது.

புதன்கிழமையன்று, மதியம் 3.00 மணியளவில், ஒன்ராறியோ மாகாணத்தின் Richmond Hill நகரில் அமைந்துள்ள குழந்தைகளுக்கான பகல் நேரக் காப்பகம் ஒன்றிற்குள் கார் ஒன்று பாய்ந்தது. இந்த விபத்தில் ஏழு குழந்தைகள் காயமடைந்த நிலையில், அவர்களில் ஒன்றரை வயது குழந்தை மருத்துவ மனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

ஏனைய ஆறு குழந்தைகளில் ஒரு குழந்தையை தவிர, மற்ற குழந்தைகளுக்கு உயிருக்கு ஆபத்தில்லை என தெரியவந்துள்ளது. அவர்களுடன் காப்பக ஊழியர்கள் மூன்றுபேரும்காயமடைந்துள்ளார்கள்.

காரை செலுத்திய 70 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வேண்டுமென்றே காரைக் கொண்டு மோதினார் என தோன்றவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் கடும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ள நிலையில், அந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.



